1973 டிசம்பர் 3] [Mr. Speaker]

படுங்கள் என்று சொன்னுல் அவர்கள் அதை கேவலமாக நினைக்கிருர்கள். 'படித்த மாணவர்களைப் போய் கோழி வளர்க்கிறீர்களா, ஆடு வளர்க்கிறீர்களா என்று கேட்கிறீர்கள் என்று கேட்கிறீர்களே' என்று கூறுகிருர்கள்."

Hence the publication in the Indian Express dated 28th November 1973 is not a correct version of the speech of the hon. Member.

According to May, to publish distorted or incorrect version of the speeches of hon. Members is a contempt of the House. Hence this publication which is an incorrect Publication will amount to a breach of privilege.

However, I think that this is an inadvertent mistake by the newspaper and expecting that they will issue a correction to the same, I do not propose to take further action now in the matter. I also wish to appeal to the Press to be more careful in future in publishing the proceedings of the House.

(முற்பகல் 10.00)

திரு. கே. எ. வகாப் : *அதை அவர்கள் திருத்தி விடுவது நலம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *நான்தான் தீர்ப்பில் சொல்லி விட்டேனே.*

4. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "சட்டப் பேரவை 41-வது விதி, பிரிவு (3)-ன்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்" என்று கேட்டு கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையிலே வேறு திருத்தங்கள் செய்ய வேண்டிய காரணத்தினால், அது நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும். திரு. ஜேம்ஸ் அவர்கள் மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசர முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

5. நடைமுறைப் கேள்வி

கேள்வி நேரத்திற்குப் பிறகு உடனடியாக அவையுரிமைப் பிரச்சினைகளை எடுத்துக்கொள்ளாதது குறித்து.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சட்டப் பேரவையின் விதி எண் 186-ன் கீழ் இப்பொழுது ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறேன். பேரவைத் தலைவர் அவர்கள், 1—12—1973 அன்றும், இன்றும் நம்முடைய சட்டப் பேரவையின் விதிமுறைக்கு மாறாக நிகழ்ச்சியை நடத்துவதனால் நான் இந்த ஒழுங்குப் பிரச்னையை வலியுறுத்த விரும்புகிறேன்.

விதி 186-ல்—

'A matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon.

Provided that a matter of privilege arising during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business.'

என்று இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்கள், சபையில் எது இருந்தாலும் உரிமைப் பிரச்னைக்குத்தான் முன்னிடம் தர வேண்டும் என்பதுதான் நம்முடைய விதிமுறை. ஆனால், பேரவைத் தலைவர் அவர்கள், 1-12-1973 அன்று உரிமைப் பிரச்சினை சபையில் இருக்கிற காலத்தில், மற்ற உரிமைப் பிரச்னைகளுக்குரிய தீர்ப்பை வழங்கினீர்கள். அதே போல், இன்றும் நம்முடைய மாண்புமிகு திரு. வகாப் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறார். அதை முன்னாலே எடுத்துக் கொள்ளாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அறிக்கை படிப்பதற்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே, நம்முடைய விதிமுறைக்கு மாறாக